<u>முதலாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் , ஈரோடு</u>

<u>**O.S.No.64/2016**</u>

2026 ஆம் வருடம் மார்ச் ஏப்ரல் 27 ம் தேதியன்று **PW**3 ஆக விசாரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டத்திலுள்ள பிரிவு (7 ன்படி) **திருமதி.S.எழில்,M.L.,** முதலாம் கூடுதல் மாவட்ட நீதிபதி, ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **ஞானசம்பந்தன்** | --- | : | |
| தந்தை /கணவர் பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூக்கா | : | | மாவட்டம் | : | |

**வாசா 3 மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு__காணொளி வாயிலாக திறந்தவெளி நீதிமன்றத்தில் திரு.உமாசங்கர் BC அவர்களால் சாட்சியை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

<u>குறுக்கு விசாரணை</u>

நான் **M.Sc.,M.Phil.,PGDLA** படித்திருக்கிறேன். **M.Sc** மற்றும் **M.Phil** இயற்பியல் படித்திருக்கிறேன். **PGDLA labour administration** படித்திருக்கிறேன். **Handwriting and signature** சம்மந்தப்பட்ட படிப்பு படித்திருக்கிறேனா என்றால் **National institute of criminology and forensic science** ல் பயிற்சி எடுத்துள்ளேன் மற்றும் ஆவணங்களை வைத்து ஆய்வு மேற்கொள்வதற்கு சிறப்பு பயிற்சி எடுத்து கொள்ள பெலாரஸ் நாட்டிற்கு சென்றுள்ளேன். இத்துறையில் ஆவண நிபுணராவதற்கு எங்களுக்குள்ள சிலபஸ் உள்ளது. அதில் நான் இயக்குநர் அவர்கள் அமைத்த **High level committee** முன்னர் தேர்வு எழுதியும் தேர்ச்சி பெற்ற பின்னர்

தான் நான் ஆவண நிபுணர் ஆவதற்கு தகுதி பெற்றுள்ளேன். என்னுடைய ரிபோர்ட்டில் கல்வி தகுதி சான்று இணைக்கப்படவில்லை என்றால் சரிதான். **Disputed signature and admitted signature** ஐ பெரிது படுத்தி எத்தனை புகைப்படங்கள் எடுத்தேன் என்றால் இரண்டும் சேர்த்து 11 புகைப்படங்கள் எடுத்திருக்கிறேன்.பெரிதுபடுத்திய புகைப்படங்களின் அடிப்படையில் தான் ஆய்வு செய்து அறிக்கை வழங்கியுள்ளேன் என்றால் புகைப்படம் மட்டும் அல்லாது **VSC** கருவி மூலமாகவும் ஆய்வு மேற்கொண்டு அறிக்கை வழங்கியுள்ளேன். **VSC** கருவி என்பது அதிநவீன தொழில்நுட்பம் கொண்ட கருவி. துல்லியமாக ஆய்வு மேற்கொள்ள உதவும். ஆய்விற்காக எடுத்த புகைப்படத்தையோ மற்றும் **VSC** கருவி மூலம் எடுத்த புகைப்படத்தையோ என் அறிக்கையுடன் இணைக்கவில்லை என்றால் சரிதான். தேவைப்பட்டால் அனுப்பி வைக்கிறேன். **Signature** ல் **writing characteristic** எத்தனை விசயங்களை ஆய்வு செய்வோம் என்றால் 16 விசயங்களை ஆய்விற்கு எடுத்து கொள்வோம். **Signature** போடுவதற்கு **pen position**, **Pen mold**, **slant**, **size**, **line quality**, **tremors**, **curves**, **connections**, **rhytham**, **alignment**, **stroke**, **arrangement of position** ஆகிய 16 விவரங்களும் அடங்கும் என்றால் சரிதான். என்னுடைய ஒபினியனில் தனித்தனியாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல காரணத்தாளில் **skill** , **alignment**, **relative sizing**, **connections**, **termination**, **loops and curves** என்று அந்த நபரின் தனிப்பட்ட குணாதியசங்களை அறிக்கையில் சொல்லியிருக்கிறேன். எழுதப்பட்ட பேப்பரினுடைய வித்யாசத்தையும் மை வித்யாசத்தாலும் கையெழுத்து மாறுபடலாம் என்றால் சரியல்ல. கையெழுத்தின் குணாதியசங்களின் அடிப்படையில் தான் ஆய்வு மேற்கொள்ளப்படும். **Disputed signature** உள்ளது காசோலை என்றால் சரிதான். **Admitted signature Bank opening form paper**. கையெழுத்து ஆண்டுக்கு ஆண்டு மாறுபட வாய்ப்பு உள்ளதா என்றால் அது இயற்கையான மாறுபாடு. **Admitted signature** 2009 க்கானது என்றால் சரிதான். காசோலைகள் 2015 என்றால் சரிதான்.

மேற்படி 6 வருட கால இடைவெளியில் கையெழுத்து மாறுபட வாய்ப்பு உள்ளது என்று சொன்னால் அது இயற்கையான மாறுபாடு (**Natural variation**) என்று எடுத்து கொள்ளப்படும். ஒவ்வொருவருக்கும் பொருந்தும். எழுதும் பேனாவின் வித்தியாசத்தினாலும் கையெழுத்தை ஒப்பிடும் போது வேறுபடும் என்று சொன்னால் சரியல்ல. கையெழுத்து குணாதியசங்களின் அடிப்படையில் தான் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. **Arm movement**, **wrist movement**, **forearm movement**, **finger movement** இவைகளையும் ஆய்விற்கு உட்படுத்த வேண்டுமென்றால் என்றால் சரிதான். **finger movement** என்பது குழந்தைகளுக்கு பொருந்தும். **Arm movement** என்பது ஆசிரியர்களுக்கு பொருந்தும். (**Block board writing**). இவைகளை ஆய்வுக்கு எடுத்து கொண்டு அதன் அடிப்படையில் தான் **alignment** என்ற வார்த்தையால் குறிப்பிட்டுள்ளோம். **Arm movement**, **wrist movement**, **forearm movement**, **finger movement** சம்மந்தப்பட்ட விசயங்களை என்னுடைய ஆய்விற்கு எடுத்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் கருத்துரை வழங்கவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய கருத்துரையில் **V** ,**E**, **M** ஆகிய 3 எழுத்துகள் மட்டும் குறிப்பிட்டு அறிக்கை கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. **V** ,**E**, **M** மற்றும் அதை தொடர்ந்து **strokes** என்ற வார்த்தை கொடுக்கப்பட்டுள்ளது. இது தனிப்பட்ட நபரின் கையெழுத்து குணாதியசம் ஆகும். **V** ,**E**, **M** தவிர மற்ற எழுத்துகளை நான் ஆய்வு செய்யவில்லை என்றால் சரியல்ல. மற்ற எழுத்துகள் **Strokes** ஆக இருப்பதால் அதையும் ஆய்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளோம். **Disputed signature** ல் மற்ற எழுத்துகளும் அதை நான் **Stroke** என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. ஒருவரின் கையெழுத்தை பரிசோதனைக்கு உட்படுத்தும் போது பதிவு அலுவலக ஆவணமான பத்திரங்களில் உள்ள கையெழுத்தை தான் ஒப்பீடு செய்வதற்கு ஒப்புகொள்ளப்பட்ட ஆவணமாக எடுத்து கொள்ளவேண்டும் என்றால் சரியல்ல. நடைமுறையில் உள்ள ஆவணங்களை ஏற்று கொண்டு ஆய்வு மேற்கொள்ளலாம். அரசு அலுவலகத்தில் பதிவு செய்யப்படும் கையெழுத்துகளை அடிப்படையாக கொண்டு ஆய்வு

செய்துவது தான் சிறந்த முறை என்றும் தனிப்பட்ட ஆவணம் என்பது ஆய்வு செய்ய எடுத்து கொள்ள கூடாது என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்தில் இருந்து அனுப்பப்பட்ட ஒப்பு கொள்ளப்பட்ட ஆவணம் அரசு வங்கியின் கணக்கு தொடங்கும் போது ஏற்று கொள்ளப்பட்ட ஆவணம். **Admitted** ஆவணத்தில் உள்ள கையெழுத்தும் பிரச்சனைக்குரிய ஆவணத்தில் உள்ள கையெழுத்தும் வெவ்வேறானவை என்றால் சரியல்ல. நான் சரிவர ஆய்வு செய்யாமல் ஒரு தவறான கருத்துரை வழங்கியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் ஆவணங்களை சரியான முறையில் ஆய்வு செய்யாமல் தவறான அறிக்கையை வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.